Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 124 | வெள்ளிக்கிழமை Friday | 06.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# எல்லோரும் பாராட்டும் வகையில் கூட்டணி முடிவு

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை: திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகள் மற்றும் ஒரு ராஜ்ய சபா சீட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2021 சட்டசபைத் தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சி 25 தொகுதிகளை ஒதுக்கீடு செய்திருந்தது. இம்முறை 3 தொகுதிகள் கூடுதலாக சேர்த்து 28 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2021-ம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு 25 இடங்கள் ஒதுக்கப்பட்டன. பல கட்டப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, மார்ச் 2021-ல் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் தமிழககாங்கிரஸ்கமிட்டித் தலைவர் கே.எஸ். அழகிரி முன்னிலையில் இதற்கான அதிகாரப்பூர்வ ஒப்பந்தம் கையெழுத்தானது.

2011 தமிழக சட்டசபைத் தேர்தலின் போது காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சியில் இருந்தது. இதன் காரணமாக திமுக கூட்டணியில் அங்கம் வகித்த காங்கிரஸ் கட்சி 63 தொகுதிகளில் போட்டியிட்டு 5 தொகுதிகளை மட்டுமே வென்றது. இதன் காரணமாகவே ஒவ்வொரு சட்டசபைத் தேர்தலின் போதும் திமுக தொகுதிகளின் எண்ணிக்கையை குறைக்க தொடங்கியது. கடந்த 2016 சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 41 இடங்களில் போட்டியிட்டிருந்தது. ஆனால், அந்தத் தேர்தலில் வெறும் 8 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. இதன் விளைவாக, 2021 தேர்தலில் திமுக காங்கிரஸ் கட்சிக்கு 25 இடங்களை மட்டுமே ஒதுக்கியது. தொடக்கத்தில் அதிக இடங்களைக் கோரிய போதிலும்,கூட்டணியின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் காங்கிரஸ் தலைமை இந்த எண்ணிக்கையை ஏற்றுக்கொண்டது. 2021 தேர்தலில் ஒதுக்கப்பட்ட 25 இடங்களில், காங்கிரஸ் கட்சி 18 இடங்களில் அமோகவெற்றிபெற்றது. இது கடந்த தேர்தலை விட மிகச்சிறந்த வெற்றியாகக் கருதப்பட்டது.

வெற்றி சதவீதம்: போட்டியிட்ட இடங்களில் சுமார் 72% இடங்களை காங்கிரஸ் கைப்பற்றியது. கூட்டணி வெற்றி: திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் மொத்தம் 159 இடங்களைக் கைப்பற்றி ஆட்சியைப் பிடித்தன. சட்டமன்றத் தேர்தலோடு சேர்த்து நடைபெற்றகன்னியாகுமரி மக்களவை இடைத்தேர்தலிலும் காங்கிரஸ் கட்சிக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. மறைந்த வசந்தகுமார் அவர்களின் இடத்திற்குப் போட்டியிட்ட அவரது மகன் விஜய் வசந்த், அந்தத் தொகுதியில் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்திற்குத் தேர்வானார்.

தஞ்சையில் நடந்த பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் இல்லத் திருமண விழாவில், தேர்தல் கூட்டணி பற்றி முதல்வர் மு.க. ஸ்டாலின் மகிழ்ச்சியுடன் பேசினார்.

விழாவில்பேசியஅவர், "நேற்று இரவுவரை,கூட்டணி கட்சிகளுடன் பேசி ஒப்பந்தத்தை முடித்துவிட்டுதான், அதுவும் வெற்றிகரமாக முடித்துவிட்டுதான், எல்லோரும் பாராட்டும் வகையில் முடித்து விட்டுதான் வந்திருக்கிறேன். இன்றைக்கு நீங்கள் எல்லோரும் சமூக வலைதளங்களில்பார்த்திருக்கலாம், ஒப்பந்தை முடித்துவிட்டு காரில் ஏறியபோது, கை காட்டிவிட்டு காரில் ஏறினேன். அதை நான் திட்டமிட்டு செய்யவில்லை, காரில் ஏறியபோது அங்கு நின்று கொண்டிருந்த பத்திரிக்கையாளர்களைப் பார்த்து 'முடிந்துவிட்டது' என்று கூறினேன்.அதை இன்றைக்கு பெரிய வைரல் ஆகிவிட்டார்கள்.

ஆகவே, அந்த மகிழ்ச்சியுடன்தான் வந்திருக்கிறேன்

திமுக - காங்கிரஸ் தேர்தல் கூட்டணி பேச்சு வார்த்தை நடந்து வந்த நிலையில், காங்கிரஸுக்கு 28 பேரவைத் தொகுதிகள் மற்றும் ஒரு மாநிலங்களவை சீட் ஒதுக்கப்பட்டுள்ளதாக திமுக அறிவித்துள்ளது.

இதுவரை காங்கிரஸ், மமக, மதிமுக, ஐயுஎம்எல், மக்கள் நீதி மையம் உள்ளிட்ட கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று முடிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு போட்டியிடுவதாக நிதிஷ் குமார் அறிவிப்பு



பாட்னா:

மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட இருப்பதாகத் தெரிவித்துள்ள பிஹார் முதல்வர் நிதிஷ் குமார், மாநிலத்தில் அமைய உள்ள புதிய அரசுக்கு தனது முழு ஆதரவும் வழிகாட்டுதலும் இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நீங்கள் என் மீது நம்பிக்கை வைத்து உங்கள் ஆதரவை அளித்து வருகிறீர்கள். இந்த வலிமை மூலம்தான் நாங்கள் பிஹாருக்கும் உங்கள் அனைவருக்கும் முழுமையான விசுவாசத்துடன் சேவை செய்து வருகிறோம். உங்கள் நம்பிக்கை மற்றும் ஆதரவின் காரணமாகவே பிஹார் இன்று வளர்ச்சியுடன் கூடிய மரியாதையின் புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது.

இதற்காக நான் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது பொது வாழ்க்கையின் தொடக்கத்தில் இருந்து பிஹார் சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் நாடாளுமன்றத்திலும் உறுப்பினராக வேண்டும் என்று நான் விரும்பினேன்.

எனவே, இந்த முறை மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட விரும்புகிறேன்.

பிஹார் மக்களுடனான எனது இந்த உறவு எதிர்காலத்திலும் தொடரும் என்றும், வளர்ச்சி அடைந்த பிஹாரை உருவாக்க ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கான எனது உறுதிப்பாடு அசைக்க முடியாததாக இருக்கும் என்றும் நான் மனமார உறுதியளிக்கிறேன். பிஹாரில்அமையஉள்ள புதிய அரசாங்கத்துக்கு எனது முழு ஆதரவும் வழிகாட்டுதலும் இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

வரும்மாநிலங்களவை தேர்தலி ல் பிஹாரில் நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் கட்சி 2 இட ங்களில் வெற்றி பெறும் நிலையில் உள்ளது. இதில் ஒன்றில் நிதிஷ்குமாரும் மற்றொன்றி ல் மத்திய அமைச்சர் ராம்நாத் தாக்கூரும் போட்டியிட உள்ளனர். மாநிலங்களவைக்கு ப் போட்டியிட உள்ளதால் நிதிஷ் குமார் முதல்வர் பதவியில் இருந்து விலக உள்ளார். அடுத்த முதல்வராக பாஜகவைச் சேர்ந்த ஒருவர் பதவியேற்பார் என்றும், நிதிஷ் குமாரின் மகன் நிஷாந்த் குமார் துணை முதல்வராகப் பொறுப்பே ற்பார் என்றும்,நிதிஷ் குமார் விரைவில் மத்திய அமைச்சராக பொறுப்பேற்பார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தொகுதி பங்கீடு குறித்து விரைவில் அறிவிப்பு வெளியாகும்:

# அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உறுதி



சென்னை: சட்டமன்றத் தேர்தலுக்கான அதிமுக கூட்டணியின் தொகுதி பங்கீடு குறித்து விரைவில்அறிவிப்புவெளியாகும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் திருச்சி சிவா, என்.ஆர். இளங்கோ, அந்தியூர் செல்வராஜ், என்.வி.என். கனிமொழி சோமு, தம்பிதுரை, ஜி.கே.வாசன் ஆகியோரின் மாநிலங்களவை பதவிக்காலம், வரும்ஏப்ரல் 2ஆம் தேதியுடன் நிறைவடைகிறது. அந்த இடங்களை நிரப்புவதற்கானதேர்தல்,வரும் 16ஆம் தேதி நடைபெறுகிறது.இதற்கானவேட்புமனு தாக்கல் செய்ய இன்றே கடைசி நாளாகும்.

இதையடுத்து, திமுக கூட்டணிசார்பில்திருச்சி சிவா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், தேமுதிக சார்பில்சுதீஷ்,காங்கிரஸ் சார்பில் கிறிஸ்டோபர் திலக் ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர். இந்நிலையில், இன்று தலைமைச் செயலகத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அக்கட்சி சார்பில் தம்பிதுரையும், பாமகவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கு அன்புமணி ராமதாஸும் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அன்புமணி ராமதாஸ், "மாநிலங்களவை தேர்தலில் போட்டியிட இன்று வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளேன். அதிமுக கூட்டணியின் தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட கூட்டணிக் கட்சிதலைவர்கள்,பாமக அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்றதேர்தல் களம் எங்களுக்கு சாதகமாக உள்ளது.கடந்த 5 ஆண்டுகால கொலை, கொள்ளை, கஞ்சா, மது, ஊழல், பெண்களுக்கு எதிரான கொடுங்கோல் ஆட்சிக்கு தமிழக மக்கள் முற்றுப்புள்ளி வைப்பார்கள். அதன்படி, குறைந்தது 200 தொகுதிகளிலாவது எங்களது கூட்டணி வெற்றி பெறும். அதேபோல, தொகுதிப் பங்கீடு விரைவில் நடத்தப்படும்.

அன்றாடம் ஒவ்வொரு அமைப்பினரும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஏனென்றால், திமுக அதன் வாக்குறுதிகளில் 66 சதவீதத்தை தான் நிறைவேற்றியுள்ளது. ஆனால், முதலமைச்சர் 98% நிறைவேற்றியுள்ளதாக தெரிவிக்கிறார்" என குற்றம் சாட்டினார்.

தொடர்ந்து பேசிய தம்பிதுரை, "அதிமுக சார்பில் மீண்டும் நாடாளுமன்றத்தில் பணியாற்ற எனக்கு வாய்ப்பளித்த எடப்பாடி பழனிசாமிக்கு நன்றிதெரிவித்துகொள்கிறேன். மாணவ பருவத்தில், எம்ஜிஆரின் தீவிர விசுவாசியாக இருந்து அதிமுகவிற்காக பணியாற்றியவன். 1984ஆம் ஆண்டு துவங்கிய எனது நாடாளுமன்ற பணி, தொடர்ந்து ஜெயலலிதா மத்திய அமைச்சர் பொறுப்பை பாஜக அமைச்சரவையில் கொடுத்தார். அப்போது தான் நான்கு வழிசாலை திட்டத்தை கொண்டுவந்தோம். 2010ஆம் ஆண்டு ஸ்பெக்ட்ரம் ஊழலை நாட்டு மக்கள் முன் கொண்டு வந்து, நாடாளுமன்றத்தை முடக்கினோம். 40 ஆண்டுகால டெல்லி அரசியலில் பயணித்து வருகிறேன். அதிமுகவுக்கும், எடப்பாடி பழனிசாமிக்கும் விசுவாசமாக இருப்பேன். இயக்கத்தை நம்பியவர்கள் கெட்டுப்போவதில்லை. மீண்டும் அதிமுக ஆட்சிக்கு வரும். எடப்பாடி பழனிசாமி தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பார்" என்றார்.

இறுதியாக எடப்பாடி பழனிசாமியிடம் தொகுதிப் பங்கீடு குறித்து நிருபர் கேட்ட கேள்விக்கு, "தொகுதி பங்கீடு குறித்து விரைவில் அறிவிக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில்**

**இணையுங்கள்**

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தங்கம் விலை தொடர் சரிவு: பவுனுக்கு எவ்வளவு குறைந்தது தெரியுமா?



சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை வியாழக்கிழமை பவுனுக்கு ரூ.640 குறைந்து ரூ.1,20,960-க்கு விற்பனையாகிறது.

சர்வதேச அளவில் போா்ப் பதற்றம் நிலவி வருவதை அடுத்து தங்கம் விலை உயரும்என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், நான்காவது நாளாக தங்கம் விலை குறைந்துள்ள மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்துள்ளது.

சென்னையில் தங்கம் விலை இந்த வாரம் தொடக்கம் முதலே குறைந்த வண்ணம் உள்ளது. கடந்த மார்ச் 2-இல் பவுனுக்கு ரூ.920, மார்ச் 3-இல் பவுனுக்கு ரூ.1,560 குறைந்தது.

மார்ச் 4 -இல் பவுனுக்கு ரூ.2,120குறைந்தது.வியாழக்கிழமை கிராமுக்கு ரூ.80 குறைந்து ரூ.15,120-க்கும்,பவுனுக்கு ரூ.640 குறைந்து ரூ.1.20,960- க்கும் விற்பனையாகிறது. கடந்த நான்கு நாள்களில் மட்டும் பவுனுக்கு ரூ.5,240 குறைந்துள்ளது.

ஆனால், வெள்ளி விலையில் மாற்றமின்றி கிராம் ரூ.295-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ. 2.95 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.



தமிழக அரசின் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில், தூத்துக்குடி மாவட்ட மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்தை ரூ.150 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னையில் இருந்தபடி காணொலிக்காட்சிவாயிலாகஇந்தவிரிவாக்கப்பணிகளுக்குஅடிக்கல்நாட்டி, பணிகளை முறைப்படி தொடங்கி வைத்தார்.இத்திட்டம் சுமார் ரூ.150 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது. தூத்துக்குடியில் நடைபெற்ற இவ்விழாவில், மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி பிரையண்ட் நகரில் 100 வீடுகள் கொண்ட காவலர் குடியிருப்புகளை முதலமைச்சர் ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்



தூத்துக்குடி பிரையண்ட் நகர் பகுதியில் தமிழ்நாடு காவலர்வீட்டு வசதி வாரியம் (திருநெல்வேலி கோட்டம்) மூலம் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 10மாடி அடுக்குமாடி காவலர் குடியிருப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காணொளிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். மொத்தம் 100வீடுகளைக் கொண்ட இந்த நவீன குடியிருப்புகள், காவலர்களின் நலன் கருதி அரசு உத்தரவின் பேரில் கட்டி முடிக்கப்பட்டு ள்ளன.

முதலமைச்சரின் தொடக்க விழாவைத் தொடர்ந்து,

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் சி. மதன், புதிய குடியிருப்பில் குத்துவிளக்கேற்றி முறைப்படி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடுகாவலர்வீட்டுவசதி வாரியத்தின் செயற்பொறியாளர் குமரேசன், தூத்துக்குடிகாவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் ஆறுமுகம், பயிற்சி காவல் உதவி கண்காணிப்பாளர் ராகுல் வி. கோபால், நகர உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் சுனில் மற்றும் காவல் ஆய்வாளர்கள் உட்பட முக்கியப் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்டம் பெரியகுளத்தில் பிளாஸ்டிக் உபயோகிப்பதை தவிர்க்கும் வகையில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் கிராம துணிக்கடை திறப்பு விழா



தேனி மாவட்டம்பெரியகுளத்தில், ஜேசி ரெசிடென்சி, கேட் ரோட்டில் புதிய துணி கடை திறப்பு விழா நடைபெற்றது

நபார்டு வங்கி மானியத்துடன் அகில் சுய உதவிக்குழு சார்பில் சர்வோதய சொசைட்டி மேற்பார்வையில் கிராம துணிக்கடை திறப்பு விழா இன்று நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் நபார்டு பிராந்திய அலுவலக துணை பொது மேலாளர் பூமா புவனேஸ்வரி, மற்றும் தேனி நபார்டு டிடிஎம் ராபின்சன் ராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு புதிய கடையினை திறந்து வைத்தனர்

பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்து சுற்றுச்சூழல் பாதுகாக்கும் வகையில் பொதுமக்கள் பயன்படுத்தும் பொருட்களான காகிதப் பைகள், சணல் பொருட்கள் மற்றும் பல்லா பொருட்கள் உள்ளிட்டவை இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது

இந்த நிகழ்ச்சியில் மகாராஜன், அன்புக்கரசன் மணி கார்த்திக் சக்திவேல் மற்றும் கிராம துணிக்கடை பணியாளர்கள் என ஏராளமான கலந்து கொண்டனர்



திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2026 ம் ஆண்டு நடைபெறும் சட்டமன்ற தொகுதியின் பேச்சு வார்த்தை குழுவில் இடம் பெற்றுள்ள மாநில அமைப்பு செயலாளர் ஐயா ஆர் எஸ் பாரதியிடம் தமிழ் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் தமிழ் சிறுத்தைகள் கட்சியின் நிறுவனர் /தலைவர் சு அகத்தியன். அவர்கள் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நேரில் சந்தித்து தமிழ் சிறுத்தைகள் கட்சிக்கு மேற்கு தலங்களில் உள்ள பவானிசாகர் ,அவிநாசி . தாராபுரம் .வால்பாறை ஆகிய தொகுதிகளில் ஏதாவது ஒரு சட்ட மன்ற தொகுதியை தமிழ் சிறுத்தைகள் கட்சிக்கு ஒதுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தார் . தமிழ் சிறுத்தைகள் கட்சியின் கோரிக்கையை கனிவோடு கேட்ட ஐயா ஆர் எஸ் பாரதி அவர்கள் பரிசீலனை செய்வதாக தெரிவித்தார் . பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தமிழ் சிறுத்தைகள் கட்சிக்கு ஐயாவை சந்திக்கும் வாய்ப்பை வழங்கியதற்கு நன்றி தெரிவித்து விடை பெற்றோம் . உடன் மாநில மகளிர் பொதுச்செயலாளர் அம்சவேணி கனகராஜ் மாநில செயலாளர் கு ஆறுமுகம் தலைமைக்குழு பொறுப்பாளர்கள் நீலமலை நந்தன் சோபனா சுரேஷ் உள்ளனர்



## கோவை காவல் தெய்வம் கோனியம்மன் கோவிலில் தேரோட்டம் ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்

கோவை, கோனியம்மன் கோவிலில் திருக்கல்யாண நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து இன்று தேரோட்டம் நடைபெற்று வருகிறது இதில் ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகின்றனர். கோவையின் காவல் தெய்வம் என்று போற்றப்படும் கோனியம்மன் கோவில் தேர்த்திருவிழா ஆண்டுதோறும்கொண்டாடப்பட்டு வருகிறது. கோவை, பெரிய கடை வீதியில் உள்ள கோனியம்மன் கோவிலில் இந்த ஆண்டுக்கான தேர்த்திருவிழா கடந்த மாதம் 17 ஆம் தேதி பூச்சாட்டு விழாவுடன் தொடங்கியது.தொடர்ந்து 24 ஆம் தேதி கொடியேற்றப்பட்டு அன்று இரவு அக்னிச்சாட்டு நடைபெற்றது. தேர் திருவிழாவை ஒட்டி அம்மனுக்கு நாள்தோறும் சிறப்பு பூஜைகள், அபிஷேகம் நடைபெற்றன. மேலும் அம்மன் ஒவ்வொரு நாளும் புலி வாகனம், கிளி வாகனம், சிம்மவாகனம், அன்ன வாகனம், காமதேனு வாகனம், வெள்ளை - யானை வாகனத்தில் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். விழாவை ஒட்டி ஏராளமான பக்தர்கள் நாள்தோறும் கோவிலுக்கு வந்து அம்மனை வழிபட்டுச் சென்றனர். மேலும் பக்தர்கள் அங்கு உள்ள அக்னி கம்பத்திற்கு புனித நீர் ஊற்றி வழிபட்டனர். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருக்கல்யாணம் நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது.இதை ஒட்டி காலை 7 மணிக்கு உற்சவஅபிஷேக,அலங்கார பூஜை நடந்தது.பின்னர் கோவில் வளாகத்தில் உள்ள முருகன் சன்னதி அருகே அம்மன் திருக்கல்யாணம் நிகழ்ச்சி நடைபெற்றது. அம்மன் பட்டு உடுத்தி சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளினார். தொடர்ந்து கோவில் அர்ச்சகர்கள் திருக்கல்யாணம் வைபவத்தை நடத்தி வைத்தனர். இதில் பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர். விழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் நடைபெற்றது. முன்னதாக அம்மன் கோவிலில் இருந்து சிறப்பு அலங்காரத்தில் புறப்பட்டு, தேரில் எழுந்து அருளினார். பின்னர் தேரை முக்கிய பிரமுகர்கள் வடம் பிடித்து தொடங்கி வைத்தனர். தேர் ராஜ வீதியில் உள்ள தேர் முட்டியில் இருந்து புறப்பட்டு, ஒப்பணக்கார வீதி, வைசாள் வீதி, கருப்ப கவுண்டர் வீதி வழியாக சென்று மீண்டும் தேர் முட்டியை சென்றடைந்தது. தேரோட்டத்தை முன்னிட்டு கோவை மாநகரில் பலத்த காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

## கோவையின் காவல் தெய்வமான கோனியம்மன் கோவிலுக்கு அக்னி குண்டம் ஏந்தி வந்தவர்களுக்கு இஸ்லாமியர்கள் தண்ணீர் கொடுத்தனர்



கோவை மாவட்டம் காவல் தெய்வம் என்று வணங்கக்கூடியகோனியம்மன் திருக்கோவில் தேர் திருவிழா இன்று விமர்சையாக நடைபெற்றது.இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சாமி தரிசனம் செய்வதற்காக வந்திருந்தனர். இந்நிலையில் பழமை வாய்ந்த அத்தார் ஜமாத் பள்ளிவாசலின் சார்பாக வரக்கூடிய பக்தர்களுக்கு சுமார் 15,000 தண்ணீர் பாட்டில் வழங்கப்பட்டது. மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி அனைவரும் அண்ணன் தம்பியாக இந்த மண்ணில் வாழ வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தோடு நிகழ்ச்சி நடைபெற்றது. திருக்கோவிலுக்கு அக்னிகுண்டம்கொண்டு வந்தவர்களுக்கு இஸ்லாமியர்கள் தண்ணீர் கொடுத்து உதவினர். மேலும் பக்தர்களுக்கும் குடிநீர் அளிக்கப்பட்ட சம்பவம் அனைவரும் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக பள்ளிவாசல் நிர்வாகிகள் அளித்த பேட்டியில் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக குடிநீர்வழங்கும்நிகழ்ச்சியை நாங்கள் செய்து வருகிறோம். மதத்தைக் கடந்த நட்புணர்வுடன் வாழும் மக்கள் நாங்கள் எனவும் அவ்வாறு கோவையின் காவல் தெய்வமான கோனியம்மன் கோவிலில் தேர் திருவிழாவில் எங்களால் முடிந்த இதை செய்வது மகிழ்ச்சி என தெரிவித்தனர்.

## அச்சிறுப்பாக்கம் அருகே பாபுராயன்பேட்டை ஊராட்சியில் நாடக கலையரங்கத்தை சுந்தர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த அச்சிறுப்பாக்கம் திமுக மாவட்ட கவுன்சிலர் வசந்தா கோகுலகண்ணன். மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார்

9.லட்சம் மதிப்பீட்டில் நாடக கலைரங்கம் மற்றும் ஊராட்சி மன்ற கட்டிடம் பூமி பூஜை விழா நடைபெற்ற அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய செயலாளர்டி.வி.கோகுலகண்ணன், ஏற்பாட்டில் சிறப்பு அழைப்பாளராக காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார் இந்நிகழ்ச்சியில் அச்சிறுப்பாக்கம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஒரத்தி கே. கண்ணன். ஆதிதிராவிட நலக்குழு மாவட்டதுணைஅமைப்பாளர் சிவக்குமார், ஒன்றிய கவுன்சிலர் பார்த்தசாரதி, மத்திய ஒன்றிய குழு நிர்வாகிகள் கருணாகரன், முகமது அலி, தருலட்சுமணன்,ஏசிரகு, இந்துமதி, ஜெயக்குமார்,துரை கணேஷ், ஜானகிராமன். பாபுராயன்பேட்டை ஊராட்சி மன்ற தலைவர் நவநீதம் லட்சுமணன், துணைத் தலைவர் பக்தவச்சலம். கிளை செயலாளர்கள் சுகுமாரன், ரமேஷ்குமார், ஊராட்சி மன்ற சுதாகர், சம்பத், தர்மராஜ்,பொன்னிவளவன், சம்மந்தம், அறிவழகன், மகளிர் அணி துளசி. உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

## சின்டெக்ஸ் டேங்க் மற்றும் குடிநீர் குழாயை பராமரிக்க ஆணையாளரிடம் வலியுறுத்திய அமவமுக தலைவர்





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அரசு பொது மருத்துவமனை நுழைவாயில் அருகில் 2003-04ல் கட்டப்பட்ட சின்டெக்ஸ் டேங்க் மற்றும் குடிநீர் குழாய் ஆனது சரிவர பராமரிப்பின்றியும், குடிநீர் குழாய்கள் பழுதடைந்து உடைந்த நிலையில் குடிநீர் வீணாகி வரும் அவலநிலை நீடித்து வருவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டினர்.

இதுதொடர்பாக அகமுடையார் மக்கள் வளர்ச்சி முன்னேற்ற கழகத்தின் நிறுவனர் மேலப்பிடவூர் அ. அருண் பிரசாத் அப்பகுதி பொதுமக்கள் சார்பாக மானாமதுரை நகராட்சி ஆணையாளர் கோபாலகிருஷ்ணன் அவர்களிடம், அரசு மருத்துவமனைக்கு வந்து செல்லும் குழந்தைகள், பெண்கள்,நோயாளிகள் மற்றும்அப்பகுதியில்உள்ள 10வது வார்டு பொதுமக்கள் பயனடையும் வகையில், இக்குறிப்பிட்ட சின்டெக்ஸ் டேங்க் மற்றும் குடிநீர் குழாயை பராமரித்து சரி செய்ய பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர துரித நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தினார்.

குறிப்பாக வீணாகி வரும் குடிநீர் சாலையோரத்தில் தேங்கி சாக்கடையாக மாறுவதால் கடும் நோய் தொற்று அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

மேலும் அக்குடிநீர் குழாய் அருகிலேயே அமைந்துள்ள மினரல் வாட்டர் இயந்திரத்தையும் சீரமைத்துபொதுமக்கள்பயன்பாட்டிற்குகொண்டுவர அருண் பிரசாத் வலியுறுத்திக் கொண்டார்.

பொதுமக்களின் கோரிக்கையையான இப்பிரச்சனையை நகராட்சி ஆணையாளரின் கவனத்திற்கு உடனடியாக எடுத்துச் சென்ற அமவமு கழக நிறுவனர் அருண்பிரசாத் அவர்களுக்கு பகுதி பொதுமக்கள் தங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## போராட்ட எதிரொலி காரணமாக வளமீட்பு பூங்காவிற்கு தேர்வு செய்த இடத்தை கைவிடும் பேரூராட்சி, பொதுமக்கள் மகிழ்ச்சி.



சிவகங்கை மாவட்டம், இளையான்குடி தேர்வுநிலை பேரூராட்சி வளமீட்பு பூங்காவிற்கு சர்வே எண்.33/4ல் ஒரு ஏக்கரும், 15 செண்டு இடம் தனியாரிடமிருந்து பெறப்பட்டது.

பெறப்பட்ட இடத்தில் வளமீட்பு பூங்கா அமைத்திட எதிர்ப்பு தெரிவித்து அதிகரை, மெய்யனேந்தல், நகரகுடி, இடையவலசை, காந்திச்சாலை, இந்திராநகர், கொங்கம்பட்டி, திருவுடையார்புரம் பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள், அவ்விடத்தில் வளமீட்பு பூங்கா அமைக்கக்கூடாது என போராட்டம் நடத்தனர்.

மேலும் காவல் ஆய்வாளர், வருவாய் மண்டல துணை வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர், செயல் அலுவலர், துப்புரவு ஆய்வாளர் உள்ளிட்டோர் அமைதிப்பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். மேற்படி சர்வே எண்ணில் உள்ள இடத்தில் குப்பை கொட்டுவதற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளதால் மாற்று இடம் வருவாய்த் துறையிடமிருந்து தேர்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இளையான்குடி பேரூராட்சியால் தீர்மானிக்கப்படுகிறது. தற்சமயம் சர்வே எண்.33/4ல் இடத்தில் சுற்று சுழல் விதிகளுக்கு பொருத்தமானதாக இல்லாததாலும் பேரூராட்சி குப்பையை ஊராட்சி பகுதியில் குப்பைகளை கொட்டுவதை நிறுத்த உள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது என எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. எனவே போராட்டமானது கைவிடப்படுவதாக கிராம பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் தெரிவித்தனர். இந்நிகழ்வில் தியாகிஇமானுவேல்பேரவைஒருங்கிணைப்பில் நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் தீயணைப்பு மற்றும் மீட்பு துறையின் சார்பாக வினாடிவினா போட்டி நடைபெற்றது. பள்ளி தலைமையாசிரியர் லெ . சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். தேவகோட்டைதீயணைப்புமீட்புபணிகள்நிலையத்தைசார்ந்தமுன்னனிதீயணைப்போர் முனீஸ்குமார்தீயணைப்புதொடர்பானகுறிப்புகளைவிரிவாகவிளக்கமாகஎடுத்துரைத்தார்.

## கோவையில் கேஜி நிறுவனத்தின், டி.என்.சி.டி சார்பாக, 'கிராண்ட் சிட்டி' பிரீமியம் எனும் குடியிருப்பு திட்டத்தின் அறிமுக விழா




கடந்த 93 ஆண்டுகளாக மக்களின் மனதில், நம்பிக்கையும் தரத்தையும் வழங்கி வருகின்ற கேஜி நிறுவனத்தின் ரியல் எஸ்டேட் பிரிவான டி.என்.சி.டி தனது புதிய பிரீமியம் குடியிருப்பு திட்டமான கிராண்ட் சிட்டி எனும் அடுக்குமாடிக் குடியிருப்புகளை, கோவை சத்தி சாலை, கணபதி பகுதியில் அறிமுகப்படுத்தியது. இந்த திட்டத்தை டி.என்.சி.டி இணை நிறுவனர் சஞ்சனா விஜயகுமார், உதவி துணைத் தலைவர் யுவராஜ், மற்றும் மூத்த மார்க்கெட்டிங் மேலாளர் ஜோஷுவா ஆகியோர் அறிமுகப்படுத்தினர். தொடர்ந்து இது குறித்து சஞ்சனா விஜயகுமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது.., வேகமாக வளர்ந்து வரும் குடியிருப்பு மையமாக உருவெடுத்து வரும் பகுதிகளில், கணபதி, சரவணம்பட்டி ஆகியவை அடங்கும், இங்கு ஐடி காரிடார் அதிகமாக அமைந்துள்ளதுஎனவே, இங்கு கிராண்ட் சிட்டி அமைக்க பட்டுள்ளது. இங்குஅடுக்குமாடி வீடுகள் வாங்க முக்கிய காரணமாக,முன்னணி கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் மற்றும் வணிக வளாகங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்கள் அருகில் இருப்பதால், சிறந்த இணைப்பும் வசதியான நகர வாழ்க்கையும் ஒருங்கிணைந்த வாழ்வையும் வழங்கும் திட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த திட்டத்தில் 1, 2 மற்றும் 3 படுக்கையறைகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளீல், நவீன வாழ்க்கை முறைக்கு ஏற்ப திறமையான இட வசதி திட்டமிடலுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இயற்கை ஒளி மற்றும் காற்றோட்டம் அதிகமாக கிடைக்கும் வகையில் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. வாஸ்து முறைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ள இந்த குடியிருப்புகளில், சில 3 படுக்கையறை கொண்ட வீடுகள் பொதுச்சுவர் இல்லாமல் தனியுரிமை அம்சத்துடன் வழங்கப்படுகின்றது என்றார். மேலும், எலக்ட்ரிக் இ.வி.சார்ஜிங் வசதிகள் மற்றும் ஸ்மார்ட் ஹோம் அம்சங்களும் இணைக்கப்பட்டுள்ளதாக கூறியதுடன், வரும் மார்ச் 8 வரை முன்பதிவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு இலவச இ.வி பைக் வழங்கப்படும் சிறப்பு சலுகையும் அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

## 64 ஆவது தேசிய மருந்தியல் வார விழாவையொட்டி போதைப்பொருள் தவிர்ப்பு விழிப்புணர்வு பேரணி

### 700க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்பு




64 ஆவது தேசிய மருந்தியல் வாரம் 2025 ஐ ஒட்டி கோவை பெரியநாயக்கன்பாளையம் யுனைடெட் மருந்தியல் கல்லூரி மற்றும் இந்திய மருந்தியல் சங்கம் இணைந்து துடியலூரில் போதைப்பொருள் தவிர்ப்பு விழிப்புணர்வு பேரணி நடத்தினர். இதில் 700க்கும் மேற்பட்ட மாணவமாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு போதைப்போருட்களுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக சென்றனர். இதில் போதைப் பொருள்களுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியில்மாணவர்கள்சென்று கொண்டிருந்தபோது சாலை ஓரத்தில் மது போதையில் ஒருவர் மயங்கி கிடந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. 64 ஆவது தேசிய மருந்தியல் வார விழா 2025 ஐ ஒட்டி இந்திய மருந்தியல் சங்கம் மற்றும் கோவை பெரியநாயக்கன்பாளையம் யுனைடெட் மருந்தியல் கல்லூரி இணைந்து தடுப்பூசி விழிப்புணர்வை முன்னெடுக்கும் மருந்தாளர்கள் கோவை துடியலூரில் இளைஞர்களிடையேபோதைப்பொருள் துஷ்பிரயோக த்திற்கு எதிராக ஒரு பொது விழிப்புணர்வு பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது.

கோவை துடியலூர் பேருந்து நிறுத்தத்தில் இருந்துதொடங்கியபேரணியை துடியலூர்காவல் நிலைய உதவி ஆய்வாளர் ரூபன்ராஜ் பிரகாஷ் கொடியசைத்து துவக்கிவைத்தார். பேரணி நிகழ்வு தொடங்குவதற்கு முன் மாணவர்களும் ஆசிரி யர்களும் உறுதிமொழிஎடுத்துக்கொண்டனர். இந்நிகழ்வில் யுனைடெட் கல்வி நிறுவனங்களின் நிறுவனர் மற்றும் தலைவர் பொறியாளர் சண்முகம், இயக்குநர் முனைவர் சிவக்குமார், மருந்தியல் கல்லூரி முதல்வர் அழகர் ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

700க்கும் மேற்பட்ட மருந்தியல் மாணவ மாணவிகள் மற்றும் 42 ஆசிரியர்கள் கலந்து கொண்டு கைகளில் போதைப் போருட்களுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திக்கொ ண்டு, போதை பொருள் விழிப்புணர்வு கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக சென்றனர். பேரணியானது துடியலூரில் தொடங்கி மேட்டுப்பாளையம் கோவை சாலையில் விஸ்வநாதபுரம் வரை சென்றது. ஒட்டுமொத்தமாக, போதைப்பொருள் துஷ்பிரயோகத்தின் ஆபத்துகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியும், இளைஞர்களிடையே ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவித்தும் இந்த நிகழ்வு பெரும் வெற்றி பெற்றது.

இந்த நிலையில் போதைப் பொருள்களுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியில்மாணவர்கள்சென்று கொண்டிருந்தபோது சாலை ஓரத்தில் மது போதையில் ஒருவர் மயங்கி கிடந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.




## குளச்சல் துறைமுக விரிவாக்க பணி துவக்கம்



குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யும் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த பணிகளை சென்னையில் இருந்து காணொளி காட்சி வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் துவங்கிவைத்தார்.கடந்த 24-ம் தேதி நாகர்கோவில் வந்த முதல்வர் இதற்கான அறிவிப்பை வெளியிட்ட நிலையில் நேற்று அதற்கான பணிகள் துவங்கப்பட்டது. இ ந் நி க ழ் ச் சி யி ல் அமைச்சர் மனோ தங்கராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். குளச்சல் துறைமுக விரிவாக்க பணி துவக்கம்

குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யும் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த பணிகளை சென்னையில் இருந்து காணொளி காட்சி வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் துவங்கிவைத்தார்.கடந்த 24-ம் தேதி நாகர்கோவில் வந்த முதல்வர் இதற்கான அறிவிப்பை வெளியிட்ட நிலையில் நேற்று அதற்கான பணிகள் துவங்கப்பட்டது. இ ந் நி க ழ் ச் சி யி ல் அமைச்சர் மனோ தங்கராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (04.03.2026) ஈரோடு மாநகராட்சி, கருங்கல்பாளையம், பாரதியார் முழுநேர கிளை நூலகத்தில் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மராமத்துப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

## ஆச்சாள்புரத்தில் மாபெரும் இலவச கண் சிகிச்சை மற்றும் பொதுமருத்துவ முகாம்



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அடுத்து உள்ள ஆச்சாள்புரத்தில் முதல்வர் பிறந்தநாளைமுன்னிட்டு மாபெரும் கண் சிகிச்சை மற்றும் பொது மருத்துவமுகாம் நடைபெற்றது.

முன்னதாக ஒன்றிய செயலாளர்கள் பாண்டியன், முத்துசாமி, ஆச்சாள்புரம் பகுதியை சேர்ந்தமாவட்டபிரதிநிதி பழனிராஜா ஆகியோர் கலந்து கொண்டு முன்னிலை வகித்தனர்,

முகாமில் கண் சிகிச்சை ,கண் நோய் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்குசிறப்புமருத்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மேலும் காய்ச்சல், இருமல், சளியால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் அனைவருக்கும் இலவச மருத்துவ ஆலோசனை மற்றும் மருந்துகள் பாண்டிச்சேரி பிம்ஸ் மருத்துவமனை சார்பில் இலவசமாக வழங்கப்பட்டன. இதேபோல் ஆச்சாள்புரம் கிராமத்தை சு ற் றி யு ள் ள கிராமங்களில் இருந்து சுமார் 500 க்கும் மேற்பட்டோர் இலவச மருத்துவ முகாமில் பயனடைந்தனர்,

இதில் ஒன்றிய நகர திமுகவினர் திரளாக கலந்து கொண்டனர்,




## வெளியம்பாக்கம் ஊராட்சியில் கலையரங்க கட்டிடம் திறப்பு

செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் தெற்குஒன்றியம்வெளியம்பாக்கம்ஊராட்சியில் ஊராட்சிபொதுநிதி2025-269லட்சம்மதிப்பீட்டில் கோ.வசந்தா கோகுலகண்ணன் நிதியில் அமைக்கப்பட்ட கலையரங்க கட்டிடம் காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் கா.சுந்தர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். அப்போது ஒன்றிய குழு பெருந்தலைவர் ஒரத்தி கே. கண்ணன், மத்திய ஒன்றிய கழக செயலாளர் டி. வி.கோகுலகண்ணன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் ஜி.சிவக்குமார், ஒன்றிய கவுன்சிலர்கள் பார்த்தசாரதி, எ. சிவகுமார்,

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் க. பிரகாஷ்,ஊராட்சி மன்றதலைவர் முத்துக்குமார், துணைத் தலைவர் தனஞ்செழியன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## விபத்தில் வாலிபர் பலி



குளச்சல் உடையார்விளை பகுதியை சேர்ந்தவர் நிதிஷ்ராஜன் (24). இவர் சம்பவத்தன்று தனது நண்பர் விஜி (23) என்பவருடன்பைக்கில்சென்றுகொண்டிருந்தார். பைக் லட்சுமிபுரம் அருகே செல்லும் போது எதிர்பாராத விதமாக எதிரே வந்த பைக்கும் நிதிஷ் ராஜன் பைக்கும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இந்த விபத்தில் எதிரே பைக்கில் வந்த ஜஸ்டின் ராஜ் (36) உட்பட 3 பேரும் படுகாயம் அடைந்தனர். ரத்த வெள்ளத்தில் துடித்த இவர்களில் நிதிஷ் ராஜன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்ற இருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.குளச்சல்போலீசார்இந்தசம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். ரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## தூத்துக்குடி மாவட்ட தருவைகுளம் மீன்பிடி துறைமுகத்தில் ரூ.150 கோடி விரிவாக்கப் பணியை முதலமைச்சர் காணொளி வாயிலாக அடிக்கல் நாட்டினார்



தூத்துக்குடி மாவட்டம் ஒட்டபிடாரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தருவைக்குளம் மீன்பிடி கிராமத்தில் மீன்பிடி துறைமுகம் ரூபாய் 150 கோடிமதிப்பீட்டில்அமைப்பதற்குமுதலமைச்சர் முக.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந் நிகழ்வில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் சமூக நலன் மற்றும் மகளிர் அமைச்சர் கீதா ஜீவன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து தருவைகுளம் கடற்கரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி. சண்முகையா ஆகியோர் கல்வெட்டை திறந்து வைத்து குத்து விளக்கேற்றி, கட்டுமான பணிகளை கொடியசைத்து துவக்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி மீன்வளத்துறை உதவி இயக்குநா புஷ்ரா ஷப்னம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் நவீன் பாண்டியன், பங்கு தந்தை வின்சென்ட், திமுக கிளைச் செயலாளர்கள் தயாளன், ராபின் ஞானப்பிரகாசம், பாஸ்கர், அவைத் தலைவர் மனோகரன், ஒன்று இளைஞர் அணி அமைப்பாளர் அணிட்டன், துணை அமைப்பாளர் சுதன் ராஜ், மற்றும் மீனவர் சங்க பிரதிநிதிகள், ஊர் மக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (05.03.2026) ஈரோடு மாவட்டம், பெருந்துறை R.S ரவுண்டானாவில் உயர்கோபுர மின் விளக்கினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (05.03.2026) ஈரோடு மாவட்டம், குமாரவலசு ஊராட்சி, தண்ணீர்பந்தல் பகுதியில் துணை சுகாதார நிலையத்தினை திறந்து வைத்து, மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மருந்துப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கினார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (05.03.2026) ஈரோடு மாவட்டம், கவுண்டிச்சிபாளையம் ஊராட்சி, ராசாம்பாளையம் பகுதியில் ரயில்வே நுழைவு பாலத்தில் அமைக்கப்பட்ட புதிய கான்கிரீட் பாதையினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோட்டில் சொல்லின் செல்வர் ஈ.வி.கே. சம்பத் நூற்றாண்டு விழா: அமைச்சர் சு. முத்துசாமி மலர்மாலை அணிவித்து மரியாதை



தமிழ்நாடு அரசியலில் "சொல்லின் செல்வர்" என்று போற்றப்படும் மறைந்த ஈ.வி.கே. சம்பத் அவர்களின் 100-வது பிறந்தநாள் விழா ஈரோட்டில் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவிற்கு ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா தலைமை தாங்கினார். ஈரோடு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அருகே உள்ள சம்பத் நகரில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, தமிழ்நாடு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார்.

மறைந்த முன்னாள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களின் மனைவி வரலட்சுமி, திருமகன் ஈவெரா மகள் சமணா ஈவெரா மற்றும் குடும்பத்தார்கள், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் மற்றும்துணைமேயர்செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த விழாவில் திமுக மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள், முன்னாள் மாவட்டத் தலைவர்கள், மண்டல, பகுதி மற்றும் வட்டாரத் தலைவர்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர். "அய்யாவின் புகழ் ஓங்குக!" என்ற முழக்கங்களுடன் தொண்டர்கள் தங்கள் தலைவருக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (05.03.2026) ஈரோடு மாவட்டம், வடமுகம் வெள்ளோடு ஊராட்சி, ராமநாயக்கன்பாளையத்தில் வடிகால் அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (05.03.2026) ஈரோடு மாவட்டம், கவுண்டிச்சிபாளையம் ஊராட்சி பகுதியில் வடிகால் வசதி அமைக்கும் பணி மற்றும் தார்சாலை அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (05.03.2026) ஈரோடு மாவட்டம், குமாரவலசு ஊராட்சி, தண்ணீர்பந்தல் பகுதியில் துணை சுகாதார நிலையத்தினை திறந்து வைத்து, மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மருந்துப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கினார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மத்திய மாவட்ட தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் செயலாளர் சிவானந்தம் மகன் மகேஷ் தர்ஷனா ஆகியோரின் திருமண நிகழ்வு ஈரோட்டில் நேற்று (மார்ச்.05) நடைபெற்றது. இதில் பல்வேறு அரசியல் பிரபலங்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.இவ்விழாவில் பா.ஜ.க.வின் தேசிய பொறுப்பாளர் அண்ணாமலை கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் எம்.யு யுவராஜா மாநிலத் துணைத் தலைவர் விடியல் எஸ்.சேகர் மற்றும் பலர் உடன் இருந்தனர்



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (05.03.2026) ஈரோடு மாவட்டம், கவுண்டச்சிபாளையம் ஊராட்சி புதுவலசு பகுதியில் புதியதாக கழிவுநீர்த்தொட்டி அமைக்கும் பணியினை தொடங்கி வைத்தார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி பலர் முகமை) பிரியா உட்பட பலர் உள்ளனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.